**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**

**O.S. No. 45 /2021**

**வா.சா.1/T.R. Karthik/09.06.2023.**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் பொறியியலில் முதுநிலை பட்டம் பெற்றுள்ளேன். எனது தந்தை ரவி Ph.D பட்டம் பெற்றுள்ளார். என் சகோதரி அனுஷா முதுநிலை மற்றும் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். 1969 லிருந்து நாங்கள் கல்வி நிறுவனங்கள் நடத்தி வருகிறோம். Engineering College, Arts and science college, Polytechnic மற்றும் பள்ளிகள் நடத்தி வருகிறோம். கடனுக்காக ஒரு கிரைய பத்திரம் ஏற்படுத்தினோம் அந்த கடனை திருப்பி செலுத்தி பத்திரம் பதிவு செய்து தரக்கேட்டபோது பிரதிவாதி மறுத்ததால் அந்த பத்திரத்தை ரத்து செய்து இடத்தை திருப்பிதரக்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. Trust சார்பாக தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து டிரஸ்ட் சொத்து தான்.

**நீதிமன்ற கேள்வி**

டிரஸ்ட் சொத்தாக தாவா சொத்து இருந்தும் அதை விற்க நீதிமன்றத்தில் அனுமதி வாங்கவில்லை

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2. டிரஸ்ட் சொத்து இல்லை என்பதால் தான் அவ்வாறு அனுமதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் பைலா படி நீதிமன்ற அனுமதி இல்லாமலேயே trustee சொத்தை விற்க முடியும். நான் கூறுவது தவறு என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கான கிரையத்தொகை Park trust க்காக கொடுக்கவில்லை என்றும் தனிநபருக்கு தான் அக்கவுண்டில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு நாங்கள் Park trust க்கு மேற்படி தொகையை மாற்றியுள்ளோம். கிரையம் வாங்கிய நபர் கிரையம் கொடுத்த எங்கள் 3 பேரின் தனிப்பட்ட அக்கவுண்டிற்கு தான் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இது தனிப்பட்ட சொத்து என்பதால் தான் தனிநபரின் அக்கவுண்டிற்கு பணம் தரப்பட்டுள்ளது என்றும் டிரஸ்ட் சொத்தாக இருந்திருந்தால் டிரஸ்ட் அக்கவுண்டிற்கு அனுப்பபட்டிருக்கும் என்றால் சரியல்ல. சார்பதிவாளர் எங்கள் தாயார் பெயரில் உள்ள சொத்து என்பதால் எங்கள் 3 பேரின் பேரில் கிரையம் ஏற்பட்டதால் தான் ஏற்றுக்கொள்ளமுடியும் என்று

சொன்னதால் எங்கள் தனிப்பட்ட பெயரில் கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து சார்பதிவாளர் தனிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றும் தனிப்பட்ட நபரின் சொத்து என்பதால் தான் நாங்கள் மூவரும் தனிப்பட்ட வகையில் கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் மூவருக்கும் தனிதனியாக சேமிப்பு கணக்குகள் உள்ளது, டிரஸ்டிற்கும் தனியாக சேமிப்பு கணக்கு உள்ளது. வருமானவரியும் தனிதனியாக செலுத்தி வருகிறோம் என்றால் சரிதான்.

3. தாவா சொத்து டிரஸ்ட் சொத்து என்பதை காட்ட எங்கள் தரப்பில் நீதிமன்றத்தில் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது சம்மந்தமாக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து தான் சொல்லமுடியும். தாவா சொத்து டிரஸ்ட் சொத்து என்பதை காட்ட என் வசம் என்ன ஆவணம் உள்ளது என்று என்னால் பார்த்து தான் சொல்லமுடியும். இது சம்மந்தமாக நான் என்ன அவணம் தாக்கல்செய்துள்ளேன் என்று பார்த்து தான் சொல்லமுடியும். தாவா சொத்து டிரஸ்ட் சொத்து இல்லை என்பதால் அது குறித்து என்னால் எந்த ஆவணமும் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பார்த்து சொல்லமுடியும் என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

4. பார்க் பள்ளி 13 ஏக்கர் நிலப்பரப்பில் நடந்து வருகிறது. குறிப்பிட்டு எந்த சர்வே எண்ணில் நடக்கிறது என்றால் எனக்கு சப்டிவிசன் எண் நினைவில்லை. சர்வே எண் 241 என்று நினைக்கிறேன். 13 ஏக்கரும் பார்க் பள்ளிக்கு சம்மந்தப்பட்டது என்பதை காட்ட எங்கள் தரப்பில் School Recognition application மற்றும் அது சம்மந்தப்பட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 6 ல் 13 ஏக்கரும் பள்ளி உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருவதையும் தாவா சொத்தும் அதில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 13 ஏக்கரும் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்று கூறுவது பொய் என்றும் அதனால் தான் வா.சா.ஆ 6 ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 எங்கள் விண்ணப்பத்தில் 13 ஏக்கர் பள்ளிக்காக பயன்படுத்தப்பட்டுவருவதாக குறிப்பிட்டுள்ளோம். அசல் ஆவணம் எங்கள் வசம் தான் உள்ளது. என்னால் இன்று நீதிமன்றத்தில் அசல் ஆவணம் தாக்கல் செய்ய முடியும். மேற்கண்ட விண்ணபத்தில் எந்தெந்த சர்வே நம்பரில் எத்தனை ஏக்கர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, பாயிண்ட் எண் 22 ல் குறிப்பிட்டுள்ளோம். இதன் அடிப்படையில் Recognition வழங்கப்பட்டுள்ளது. ஆனால் Recognition உத்தரவில்

அவ்வாறு விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Recognition உத்தரவில் அவ்வாறு விஸ்தீரணம் குறிப்பிடாத பட்சத்தில் application ல் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டதாக கூறுவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படுவது பார்க் டிரஸ்டும் பார்க் பள்ளியும் ஏற்படுத்திக்கொண்ட Lease deed என்றால் சரிதான், அது 30.11.2009 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி Lease deed பி.வா.சா.ஆ 1.** 45 வருடத்திற்கு மேற்படி lease போடப்பட்டுள்ளது. இதற்கும் நீதிமன்றத்திலிருந்து அனுமதி எதுவும் வாங்கவில்லை. இந்த லீசின் அடிப்படையில் தான் பள்ளி இயங்கிவருகிறது என்றால் சரிதான். இந்த லீஸ்டீடில் சொத்து விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த லீஸ் டீட் அடிப்படையில் Recognition கோரி அதன் அடிப்படையில் பள்ளி நடத்த அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பார்க் டிரஸ்ட் சார்பாக என் தந்தை பிவி ரவியும், பார்க் மெட்ரிகுலேசன் சார்பாக என் தாயார் பிரேமாரவியும் கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் SF No. 241/2(b)ல் 3 ஏக்கர் செக்குபந்திபோட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து SF No.241/2c ல் 4 ஏக்கர் 92 3/4 என்றால் சரிதான். தாவா சொத்து பள்ளிக்கு சம்மந்தம் இல்லாத சொத்து என்பதால் தான் லீஸ்டீடில் குறிப்பிடவில்லை என்றால் அது வேறு லீஸ்டீடாக இருக்கும். அந்த ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 லீஸ்டீடில் தாவா சொத்தும் குறிப்பிடவில்லை, பள்ளிக்கான playground, Swimming pool, ஊழியர்களின் குடியிருப்பு அமைந்திருப்பதாக லீஸ்டீடில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பள்ளிக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்பதால் தான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**கேட்டுக்கொண்டதன் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.06.09 20:02:12 +0200

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.